1972 மார்ச் 4]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, பல கட்ட விற்பனை வரி, ஒருமுனை விற்பனை வரி போன்றவற்றிற்கும், விலைவாசிகளைக் கூட்டுவதற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை.

* 301 **வினா—திரு. எம். முத்தையா** : மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) ரேடியோ மீது விதிக்கப்படும் விற்பனை வரியை குறைக்க வேண்டுமென்று ரேடியோ தயாரிப்பாளர்கள் ஏதேனும் வேண்டுகோள் விடுத்துள்ளார்களா ;

(இ) ஆம் எனில், அது பற்றி அரசு எடுத்த நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) கோரிக்கை அரசால் பரிசீலிக்கப்பட்டு ரேடியோமீது விதிக்கப்படும் விற்பனை வரியை குறைக்க இயலாமை தெரிவிக்கப் பட்டது.

Court for Valliyur

* 302 Q.—THIRU T. GANAPATHY : Will the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to locate a District Munsif-*cum*-Sub-Divisional Magistrate Court at Valliyur in Nanguneri taluk?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், புதிதாக டிஸ்டிரிக்ட் முன்சீப் கோர்ட்டுகள் அமைப்பதற்காகவும், எந்தெந்த இடங்களில் எந்த எந்த அளவிற்கு அவரவர்களுடைய ஜூரிஸ்டிக்ஷன் இருக்க வேண்டுமென்பதற்காகவும் வரதராஜன் தலைமையிலே ஒரு குழு ஓராண்டுக்காலமாக இருக்கிறதே, அந்தக் குழு தனது சிபாரிசுகளைக் கொடுத்திருக்கிறதா ? அப்படி வந்து விட்டால் அதிலே இந்த வள்ளியூர் போன்ற இடங்களும் சேர்க்கப்பட்டுள்ளனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அரசாங்கத்திற்கு அறிக்கை இன்னும் வரவில்லை.

1972 மார்ச் 4]

ஆக்குகின்ற முறையில் கிராம அதிகாரிகளிடம் கொடுக்கலாமா ? ஊராட்சித் தலைவர்களிடம் கொடுக்கலாமா ? ஹான்ரரி மெஜிஸ் திரேட் இருக்கிறார்களே அவர்களிடம் கொடுக்கலாமா என்பது அரசாங்கத்தின் பரிசீலனையில் இருந்துவருகிறது.

திரு. ஏ. சி. நரசிம்மன் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்துத் திருமணங்களைப் பதிவு செய்யும் நோக்கம் இருக்கிறது என்று தெரிவித்தார்கள். ஜாதி மத பேதம் இல்லாமல் தமிழ் நாட்டிலே இருக்கிற அத்தனை திருமணங்களையும் பதிவுசெய்யும் சட்டம் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்தந்த மதத்திற்கு என்று தனியாகச் சட்டங்கள் இருக்கின்றன. எந்த மதத்தினைச் சேர்ந் தவரும் பதிவுசெய்யும் அலுவலகத்தில் பதிவுசெய்துகொள்ளலாம் என்று சட்டம் இருக்கிறது. இந்து திருமணச் சட்டத்திலே பதிவுத் திருமணங்கள் செய்து கொள்வதற்கான வாய்ப்புக்களை உருவாக்குவதற்காகச் சட்டம் உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்து மதத்தில் நடைபெறும் திருமணங்களைப் பொறுத்த வரையில் பதிவுசெய்துவிட்டு திருமணம் செய்துகொள்ளமுடியாது, திரு மணம் செய்துவிட்டு பதிவு செய்துகொள்ளலாம். பதிவுசெய்து கொள்ளும் வாய்ப்புகள் கிராமங்களில் உள்ளவர்களுக்கும் கிடைக் கக்கூடிய வகையில் பதிவு செய்யும் அதிகாரத்தை பரவலாக்கலாமா என்பதைப் பரிசீலித்து வருகிறோம்.

* 304 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

சுயமரியாதைத் திருமண முறைகளை வகுத்து அதனை அச்சிட்டு பத்திரப்பதிவு அலுவலகங்களின் மூலம் மக்களுக்கு வழங்கிடும் செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. எஸ். வடிவேல் : ஊராட்சி மன்றங்களுக்கு அந்தப் பதிவுத் திருமண அதிகாரங்களைக் கொடுத்தால். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்தக் கேள்வியும் அதனோடு